திரு. ஆ. பரந்தாமன் : டாக்டர் அம்பேத்கார் பெயரில் அமைக்கப்படுகிற இந்தக் கல்லூரி ஆண்களுக்கா? அல்லது பெண்களுக்கா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது ஆண்களுக்கு.

திரு. என். டென்னிஸ் : சட்ட வல்லுநரான டாக்டர் அம்பேத்கார் பெயரில் மதுரையில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொழுது அது பற்றிய செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் அம்பேத்காரின் நூல்கள்

*283 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் ஆங்கில நூல்களைத் தமிழாக்கம் செய்திட திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய நாட்டில் ஒரு தனி சிந்தனைக்குச் சொந்தக்காரர் என்று போற்றப் படுபவர் ஆவார். எனவே, அவருடைய சிந்தனைக் கருவூலத்தைத் தமிழில் வெளியிடும் வகையில் முயற்சி மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இம்மாதிரி சிறந்த நூல்களை வெளியிடுகிறவர்களை ஊக்குவிப்பதற்காக நிதி உதவி அளிக்கும் திட்டமொன்று நடைமுறையில் இருக்கிறது. அதற்கான வல்லுநர் குழுவும் இருக்கிறது. யாரேனும் அம்மாதிரி நூல்களை மொழி பெயர்க்க முன்வந்தால் அந்த நூல்களை ஆராய்ந்து நிதி உதவி செய்ய வேண்டும் என்ற கருத்து தெரிவித்தால் அதன் மீது அளிக்கலாம். அந்த முயற்சியினை தனிப்பட்டவர்கள் மேற்கொள்ளலாம்.

ஊராட்சி ஒன்றிய ஜீப்புகள்

*284 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி பணிகளை கவனிப்ப தற்கென மாதத்தில் 4 நாட்களுக்கு சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் ஜீப்பினை ஒதுக்கி கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையி லுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1973 மார்ச் 8]

திரு. ஆ. பரந்தாமன் : சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் பெரும்பாலும் மாதத்திற்கு இரண்டு முறையாவது சென்று வரவேண்டியிருக்கிறது. இதை உத்தேசித்தாவது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும் கமிஷனர்களும் பயன்படுத்தும் ஜீப்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்தில் இரண்டு நாட்களாவது கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் அதைத்தான் 'இல்லை' என்று குறிப்பிட்டேன். ஜீப் கார்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் அங்கே இருக்கின்ற ஆணையர்களும் அங்கேயிருக்கின்ற அதிகாரிகளும் அவர்களுடைய பணிகளைக் கவனிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஒன்ருகும். அவர்களோடு சேர்ந்து போகின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த ஜீப்பிலே போக வழிவகை இருக்கிறது. அந்த ஜீப்பை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரண்டு நாட்கள் ஒதுக்குவது என்னும் நிலை வரும்போது பல சங்கடங்களும் மற்றவைகளும் வருகின்றன. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான ஜீப்பை, சட்டமன்ற உறுப்பினர் நான்கு நாட்கள் போகவேண்டும் என்று எடுத்துக் கொடுத்தால் பல சங்கடங்கள் ஏற்படும். நான்கு நாட்கள் அவர்களிடம் கொடுத்து, அந்த நான்கு நாட்களுக்குப் பிறகு அவர்களிடமிருந்து பெற வேண்டிய அவசியம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவர்களுக்கு ஏற்படும்போது பல நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்படக்கூடும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து கொள்வதற்குத் தாங்களே சில பல ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டியதுதான்.

திரு. மா. வெ. நாராயணசாமி: ஊராட்சி ஒன்றியங்களுக்கு உபயோகப் படுத்தக்கூடிய ஜீப்புகளை அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வெளியிலே அரசு அலுவலர்கள் தங்கள் தேவைக்கேற்ற அளவு அதிகமான நாட்கள் எடுத்துச் செல்லுகிருர்கள். குறைந்தபட்சம் மாதத்திற்கு இரண்டு நாட்களாவது அந்தந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் சுற்றிப் பார்க்க ஊராட்சி மன்றப் பெருந்தலைவர், அதிகாரிகள் உட்பட உடன் செல்லுகின்ற ஏற்பாட்டில் ஜீப் கார்கள் அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட ஏற்பாடுகளை அந்தந்த ஒன்றியங்களில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் செய்து கொள்ளுவதில் தடை இல்லை. அந்த ஆணையர், ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆகியோரோடு சட்டமன்ற உறுப்பினர் செல்லுவதற்கான ஏற்பாட்டை அவர்களே செய்து கொள்ளலாம்.

திரு. க. உரா. எட்மண்ட் : இந்த ஊராட்சி ஒன்றிய ஜீப்புகள் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு உடனடியாகக் கிடைக்கிறது. என்னைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்டால் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கேட்டால் ஜீப் கொடுக்க வேண்டு மென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

திரு. நா. வீராசாமி : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சாட்டலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் கேட்டால் ஜீப் கொடுக்க வேண்டும், எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் கேட்டால் கொடுக்கக்கூடாது என்று சட்டவிதிகள் எதுவும் இல்லை. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். எந்தக் கட்சித் தலைவர்களாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அதற்கென்று சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அது மீறப்படுமானால் அங்கு நடவடிக்கை எடுக்க வழிவகைகள் இருக்கின்றன. அந்த முறைகள் கெடாத அளவுக்கு அங்கு பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : In hilly areas it is very difficult to go to the constituencies to see them. May I request the Hon. Minister to issue an order to Panchayat Unions to give jeeps at least one day in a month ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த ஏற்பாடுகளை ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து அவர்கள் போகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து சென்று பார்வையிடுகின்ற முயற்சிகளில் ஈடுபடுவதில் தடை ஏதும் இல்லை. அதை ஒன்றிய அளவில் செய்து கொள்ளலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாமல் சட்டமன்ற உறுப்பினர்களே பெட்ரோல் ஊற்றிக்கொண்டால் ஜீப் கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதிலும் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையாளர் செல்லும் போது சட்டமன்ற உறுப்பினரும் உடன் செல்லுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ளுவதில் தடை இல்லை.

[1973 மார்ச் 8]

THIRU K. M. SUBRAMANIAM : I understand that this can be done in Panchayat Union and Panchayat areas. But what will happen to Councillors of Corporation and MLAs who want to use Government or Corporation jeeps or Municipal jeeps for inspection ? Is there anything which we can do ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டமன்ற உறுப்பினர்கள் அரசாங்க ஜீப்புகளைப் பயன்படுத்த உரிமை கொடுக்க முடியாது. அவர்கள் தனி ஏற்பாடுகள், சொந்த ஏற்பாடுகள்தான் செய்துகொள்ள வேண்டும். அரசாங்க ஜீப்புகளையோ, ஊராட்சிமன்ற ஜீப்புகளையோ ஒதுக்குவது என்பது இயலாத காரியம்.

THIRU N. DENNIS : May I know whether Government would pass specific orders for use of Panchayat Union jeeps ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே எந்தெந்த அளவில் பயன்படுத்த வேண்டுமென்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. 300 லிட்டர் பெட்ரோல்தான் உபயோகிக்கலாம் என்று இருக்கிறது. அது போதாது என்ற குறைபாடும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களிடமிருந்து வருகிறது. அதற்கென்று தனி விதிமுறைகள் இருக்கின்றன. எப்படிப் பயன்படுத்தவேண்டும், யார் யார் பயன்படுத்த வேண்டுமென்பதற்குத் தனி விதிமுறைகள் இருக்கின்றன.

திரு. கே. கந்தசாமி : சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு மாதத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு ஜீப் தேவை என்று தெரிவித்தால் பஞ்சாயத்து யூனியன் தலைவரும், கமிஷனரும் கலந்து ஒன்றாகச் சுற்றுப் பயணம் செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். அதுபற்றி அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்து கொள்வதில் தடை இல்லை என்று ஏற்கனவே குறிப்பிட்டேன்.

திரு. ஏ. எம். இராஜா : சில பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கும் ஜீப்புகள் மிகவும் பழுதடைந்து பழையனவாக இருக்கின்றன. அவற்றை மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவ்வப்போது மாற்றிக் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது. அண்மையில் 40, 41 ஜீப்புகள் மாற்றி புதிதாகக் கொடுக்க வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஜீப் கார்கள் புதிதாகக் கிடைப்பதற்கேற்ப அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ஜீப்பினால் அநேக விரோதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஜீப்பை எடுத்துவிட்டு எல்லோருக்கும் சைக்கிள் கொடுக்கும் திட்டம் வகுத்தால் எல்லோருக்கும் நலமாக இருக்கும். அதற்கு சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைச் சர்க்கார் ஏற்றுக் கொள்ளுவதில் சங்கடம் இல்லை. உறுப்பினர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறார்களா என்பதுதான் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர்கள் சைக்கிள்களையும் பயன்படுத்தி சிறப்பாக காரியம் ஆற்ற வழிவகை செய்து கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி: ஒன்றியங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்படுவதால் நிறைய பெட்ரோல் செலவாகிறது. ஆகவே, ஸ்டாண்டர்டு வான்கள் வாங்கிக் கொடுத்தால் பெட்ரோல் குறைவாகப் பிடிக்கும். எல்லா ஒன்றியங்களுக்கும் ஜீப்களுக்குப் பதிலாக ஸ்டாண்டர்டு வான்கள் வாங்கிக் கொடுக்க வழி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல்வேறு ஒன்றியங்களில் பாதை வசதிகள் மற்றவைகள் கரடுமுரடாக இருப்பதால் ஜீப்பைத் தவிர வேறு வண்டியே செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவேதான் ஜீப் ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது

திரு. கே. எ. வகாப் : இதற்கு முன்பு ஜீப்பை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள்கூட இந்தக் கேள்விக்கான பதிலைப் பார்த்தவுடன் இனிமேல் ஜீப் கொடுப்பார்களா என்று அச்சம் ஏற்படுகிறது. 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை அந்த ஜீப் காரை கண்டெம் செய்ய வேண்டுமென்று இப்போது விதிமுறை இருக்கிறது ஏழு எட்டு ஆண்டுகளில் ஜீப்பை மாற்றிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதற்கென்று சிலபல விதிமுறைகள் இருக்கின்றன. தொழில் நுட்ப அதிகாரிகள் ஆராய்ந்து ஜீப் கார் பழுதடைந்து விட்டது என்று கூறி வேறு கார் கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்தால் கொடுக்கப்படுகிறது

முத்துக்குளிப்பின் மூலம் கிடைத்த வருமானம்

***285 வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தமிழகத்தில் முத்துக்குளிப்பின் மூலமாகக் கிடைத்த தொகை எவ்வளவு ?